1971 ஜூலை 14]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட குறிப்பு வந்ததாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் கடிதப் போக்குவரத்து ஏதேனும் இருக்கிறதா என்று அறிந்து சொல்லலாம்.

கோவை நகரில் விளையாட்டுத் திடல்

*226 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் "விளையாட்டுத் திடல்" அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இவ் வாண்டு மார்ச் மாதமே வேலை துவங்கப்பட்டுவிட்டது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு லட்சம் ரூபாயிலே விளையாட்டுத் திடல் கட்டப்பட இருக்கிறது ? அதிலே அரசாங்கத்தினுடைய மானியம் 1 லட்சம் தொகையாக இருப்பதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதிலே அரசாங்கம் ஒரு விதியை வகுத்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு விளையாட்டு அரங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு அந்த வகையில் மாநில அரசு மானியமாக 1 லட்சம் ரூபாய் தரும். மற்றைய விளையாட்டுக் குழுவினரும், மாவட்ட நலக் குழுவினரும், மற்றைய தனித்தனிக் குழுக்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைத்து நிதி திரட்டிக் கொள்ளலாம். சில இடங்களிலே இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று திரட்டி அதிலே கட்டிக் கொள்கிறார்கள். சில இடங்களிலே 7 லட்சம் என்ற அளவிலே நிதி திரட்டி அரசு கொடுக்கின்ற தொகையான ஒரு லட்சத்தோடு கட்டுகிறார்கள்.

இதைத் தவிர வேறு பல நிதி திரட்டுகின்ற முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். கோவை நகரத்திலே 25 லட்சம் ரூபாயிலே கட்ட வேண்டுமென்று திட்ட மிட்டிருக்கிறார்கள். அரசு இவ்வளவு தொகையில் கட்டவேண்டுமா ? குறைத்துக் கட்டிக்கொள்ள இயலுமா என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு எழுதியிருக்கிறது. அவரிடமிருந்து பதில் வந்ததற்குப் பிறகு அதற்கேற்ற அளவில் நிதி ஒதுக்கப்பட்டு கட்டப்படும்.

அரசு மானியத்தைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே அளவுதான்—ஒரு லட்சம் ரூபாய்தான் இருக்கும். அந்தவகையிலேதான் கோயம்புத்தூருக்கும் ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்படுகிறது. சிதம்பாம் பூங்காவிலே ஆறே கால் எக்கர் நிலப் பரப்பளவிலே கட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு நகராட்சிக்குச் சொந்தமாக அந்த இடம் இருப்பதால் ஆண்டுக்கு 400 ரூபாய் என்ற அளவிலே பேசி 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ள அனுமதியளிக்க அந்த நகராட்சி ஒப்புதல் அளித்து அது அரசாங்கத்தினுடைய அனுமதிக்காக வரப் போகிறது. பல்வேறு வகைகளில் நிதி திரட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அங்கே பஞ்சாயத்து

ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றிலிருந்து 5 லட்சம் ரூபாயும் நூற்பு உரிமையாளர்களிடமிருந்து இரண்டரை லட்சம் ரூபாயும் வசூலாகி இருப்பதாகத் தெரிகிறது. மேலும் இரண்டரை லட்சம் நூல் உரிமையாளர்களிடமிருந்து வசூலிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. கோவையில் உள்ள விளையாட்டுக் குழுவினரும் 1¼ லட்சம் தருவதற்கு ஒப்புதல் தந்து இருக்கின்றனர். அரசு மானியம் 1 லட்சத்தோடு மேற்கொண்டு ஏழே முக்கால் லட்சம் திரட்டுவதற்கு கலை நிகழ்ச்சிகளை நடத்தித் திரட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும் 25 லட்ச ரூபாயிலே கட்டப்பட வேண்டுமா ? இன்னும் குறைத்துக் கட்டுவதற்கு இயலாதா என்று அரசாங்கம் கேட்டிருக்கிறது.

திரு. எம். செல்வராஜ்: தலைவர் அவர்களே, விளையாட்டு அரங்கங்களின் அன்றாடப் பராமரிப்புச் செலவிற்காக அரசாங்கத்திலிருந்து மானியம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கிற விளையாட்டு குழுவினர்கள்தான் நிர்வாகச் செலவுகளையும் மற்றவைகளையும் மேற்கொள்ள வேண்டிவரும். அரசாங்கம் பொதுவாக மாநில அளவிலே ஒரு குழு அமைத்திருக்கிறது. விளையாட்டை ஊக்குவிக்கவும், விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கவும் போட்டிப் பந்தயங்களை நடத்தவும் அந்தக் குழு நிதி ஒதுக்கீடு செய்கிறது. நிர்வாகச் செலவுகளை மாவட்ட விளையாட்டுக் குழுவினர்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கோவை விளையாட்டு அரங்கத்தில் அரசாங்கத்தினுடைய பங்கென்ன? அந்த நகராட்சியின் பங்கென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி அரசின் பங்கு ஒரு லட்சம் ரூபாய். நகர மன்றம் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை தருவதாக வாக்களித்து இருக்கிறார்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: இந்தத் திட்டத்திற்கு 25 லட்ச ரூபாய் செலவாகும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதைச் சிரமதானம் மூலம் நிறைவேற்றினால் செலவு குறைவாகாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விளையாட்டு அரங்கம் கட்டுகின்ற பெரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவது எளிதானதல்ல, சிரமத் தொண்டர்கள் மூலம் நிறைவேற்ற முடியும் என்பது ஐயப்பாட்டிற்குரியதுதான். கோவை மாவட்டத்திலே இதற்காக என்று தனிப்பட்ட பொறியியல் வல்லுநர்களும் அரசு பொறியியல் வல்லுநர்களும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு துணை ஆணையர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் அமைக்கப்பட்டு இருக்கிறார்கள். சிரமத் தொண்டர்களுக்கு வேலைகள் இருக்கின்ற காரணத்தினாலே அவற்றைச் செம்மையாகவும் நிறைவேற்றக்கூடிய நிலைமை இருப்பதாலே இவற்றிலே ஈடுபட்டு அவர்களால் அதை நிறைவேற்ற முடியும் என்று அரசு கருதவில்லை.

TRUTH ALONE TRIUMPHS